இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 99 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 03 – திங்கள்கிழமை 18 நவம்பர் 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 99 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 03 - Monday 18 November 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


# ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் குரல்களைப் பாதுகாப்போம்!

## பத்திரிகையாளர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, நவ. 18 -**

**“ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் குரல்களைப் பாதுகாப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பத்திரிகையாளர் தினத்தையொட்டி தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**



‘பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா’ தொடங்கப்பட்ட நாளான நேற்று முன்தினம் (நவ.16) நாடு முழுவதும் தேசிய பத்திரிகை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த கவுன்சில் முதன்முதலில் 1966 ஆம் ஆண்டு ஜூலை 4ம் தேதி அரை நீதித்துறை அமைப்பாக அமைக்கப்பட்டது. அப்போது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த ஜே.ஆர்.முதோல்கர் தலைவராக இருந்தார்.

அதன் பின்னர் இந்த அமைப்பு பத்திரிகைத் துறையில் தொழில்முறை நெறிமுறைகளைப் பேணுவதற்கான சட்டப்பூர்வ அதிகார அமைப்பாக 1966 ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் தேதி ‘பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா’ என மாற்றப்பட்டு பத்திரிகைகளின் சுதந்திரத்தை கண்காணிக்க தொடங்கியது.

அதன் முதல் இந்திய ஜனநாயகத்தில் சுதந்திரமான மற்றும் பொறுப்பான பத்திரிகைகளை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16ஆம் தேதி தேசிய பத்திரிகை தினம் அனுசரிக்கப்படுகிறது. அத்துடன், பத்திரிகைகள் உயர் தரத்தைப் பேணுவதையும், எந்த ஒரு செல்வாக்கும், அச்சுறுத்தலும் பத்திரிகையை கட்டுப்படுத்தப்படக் கூடாது என்பதை உறுதி செய்யும் ‘பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா’வின் செயல்பாட்டை இந்த நாளில் நினைவுகூரப்படுகிறது.

இந்த நாள் இந்தியாவில் சுதந்திரமான மற்றும் பொறுப்பான பத்திரிகை இருப்பதைக் குறிக்கிறது. பத்திரிகை சுதந்திரம் மற்றும் சமூகத்திற்கான அதன் பொறுப்புகளை குறிக்கிறது. இந்த நாளில் தான் ‘பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா’ செயல்படத் தொடங்கியது.

இந்தியாவில் பத்திரிகை சுதந்திரம் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டம் 19(1)(a) பிரிவின் கீழ் பாதுகாக்கப்படுகிறது. இது பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

பிரஸ் கவுன்சில் சட்டம், 1978 என்பது இந்தியாவில் பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களின் தரத்தை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்கத்திற்காக ஒரு பத்திரிகை கவுன்சிலை நிறுவுவதற்கான ஒரு சட்டமாகும்.

இந்நிலையில் தேசிய பத்திரிகை நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தேசிய பத்திரிகை நாளில், உண்மையையும் பொறுப்புணர்வையும் உயர்த்திப் பிடிக்கும் ஊடகவியலாளர்களின் இடையறாத முயற்சிகளைப் போற்றுகிறோம்.**

**சகிப்பின்மை உயர்ந்து வரும் இக்காலத்தில், அவர்கள் காட்டும் நெஞ்சுரம் தான் மக்களாட்சியைக் காக்கும் இறுதி அரணாகத் திகழ்கிறது. விருப்பு, வெறுப்பு பீடிக்காமல் ஊடகவியல் விளங்க வேண்டும். அவ்வாறு விளங்கி, நமது மக்களாட்சியைக் காக்கும் குரல்களைக் காக்க உறுதியாகத் துணைநிற்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## 24 ஆம் தேதி

# நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## குளிர்கால கூட்டத் தொடர் நடத்துவது குறித்து ஆலோசனை!

*புதுடெல்லி, நவ. 18 -*

*நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் நவம்பர் 25 முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 26 ஆம் தேதி அரசியல் சாசன தினத்தின் 75 வது ஆண்டு விழாவையொட்டி இரண்டு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடைபெறுகிறது.*



*19 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத் தொடரில் வகுப்பு வாரிய மசோதா, ஒரே நாடு ஒரே தேர்தல் உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களை கொண்டு வர ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. எதிர்க்கட்சிகளைப் பொறுத்த அளவில் வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான விலை உயர்வு, மணிப்பூரில் மீண்டும் அதிகரித்துள்ள வன்முறை, வகுப்பு வாரிய மசோதா, செபி தலைவரின் பங்குச்சந்தை முறை கேடுகள், இயற்கை பேரிடர்களில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது போன்ற பல்வேறு பிரச்சினைகளை எழுப்பத் திட்டமிட்டுள்ளன.*

*குறைந்தபட்ச ஆதரவு விலை கோரி நாடாளுமன்றம் தொடங்கும் 25ஆம் தேதி முதல் சம்பு எல்லையில் சம்யுக்தா கிசான் மோர்ச்சா விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.*

*இந்நிலையில் குளிர் கால கூட்டத் தொடரை அமைதியாக நடத்துவது குறித்து ஆலோசனை நடத்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டியுள்ளார். ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் இந்த கூட்டம் நவ.24ந் தேதி நடைபெற உள்ளது.*

## 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு! ரூ.174 கோடியில் நலஉதவிகள்! வளர்ச்சித் திட்டங்கள் ஆய்வு!

# அரியலூர் - பெரம்பலூரில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான வெற்றிப்பயணம்!

## மக்களிடம் பெருத்த வரவேற்பு - எழுச்சி!

**சென்னை, நவ. 18 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் மேற்கொண்ட பயணம், 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் புதிய காலணிகள் தொழிற்சாலைக்கு அடிக்கல், 76,705 தாய்மார்கள் பயன்பெறும் ‘ஊட்டச் சத்தை உறுதிசெய்’ 2ஆம் கட்டம் தொடக்கம், ரூ.174 கோடியில் 21,822 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் ஆய்வு, மக்களிடம் பெருத்த வரவேற்பையும், எழுச்சியையும் ஏற்படுத்திய மகத்தான வெற்றிப் பயணமாகும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மகளிர் விடியல் பயணத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் சேரும் மகளிர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம், அதேபோல மாணவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம், படித்து முடித்துள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்புகளுக்கு துணைபுரியும் நான் முதல்வன் திட்டம், ஆண்டுபலவாகியும் தீராத பிரச்சினைகளைத் தீர்த்து மக்கள் பயனடையச் செய்யும் மக்களுடன் முதல்வர் திட்டம், அரசுத் திட்டங்களால் அடைகின்ற பயன் ஏழை எளியோரைச் சென்று சேர்ந்துள்ளதா என்பதைக் கண்டறியும், நீங்கள் நலமா திட்டம் முதலான பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இந்தத் திராவிட மாடல் ஆட்சியின் மூலம் நிறைவேற்றி மக்களின் பேராதரவைப் பெற்று வருகிறார்கள்.

அரசுத் திட்டங்கள் மக்களைச் சென்று சேர்ந்துள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதற்காகக் ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ எனும் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். அந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டில், நவம்பர் மாதத்தில் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து வளர்ச்சி, முன்னேற்றங்கள் குறித்து நேரடியாக ஆய்வு செய்வேன் என கடந்த திங்களில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி, முதன் முதலாக நவம்பர் 5, 6. ஆகிய நாள்களில் கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு ஆய்வு செய்தார்கள்.

அடுத்ததாக, விருதுநகர் மாவட்டத்தில் நவம்பர் 9, 10 ஆகிய நாள்களில் பயணம் மேற்கொண்டு கள ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த இரண்டு மாவட்டங்களிலும் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டபோது மக்கள் எழுச்சியுடன் திரண்டுவந்து மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டினார்கள்.

அதேபோல, மூன்றாவது முறையாக அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் 15.11.2024 அன்று சுற்றுப் பயணம் மேற்கொண்டு மகத்தான பல திட்டங்களைச் செயல்படுத்தி ஏழை எளியோர்க்கு நலத்திட்டங்களை எல்லாம் வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்கள் விழாக் கோலம் கொண்டு மக்கள் திரண்டு வந்து வரவேற்பு அளித்த காட்சிகள் முதலமைச்சர் அவர்களின் திட்டங்களுக்குக் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியைப் பறைசாற்றின.

### ஜெயங்கொண்டத்தில் புதிய காலணி சிப்காட் தொழிற்பூங்கா அடிக்கல் நாட்டு விழா!

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் சிப்காட் தொழிற்பூங்காவில் 1000 கோடி ரூபாய் முதலீட்டான புதிய காலணிகள் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். இந்தக் காலணி தொழிற்சாலை 15,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய அருமையான திட்டமாகும். ஜெயங்கொண்டம் பகுதியைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரம் பெருகி அப்பகுதி பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதற்கு வழிவகுக்கும் மகத்தான திட்டமாகும்.

இந்தக் காலணி தொழிற்சாலைக்கு அருகே வசித்துவரும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள பழங்குடியின மக்களுக்கு 3.52 ஹெக்டேர் நிலத்தில் இலவச வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. திராவிட மாடல் ஆட்சியில், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயத்தப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல்மின் உற்பத்தித் திட்டத்திற்காக 2005ஆம் ஆண்டு வரை 13 கிராமங்களில் கையகப்படுத்தப்பட்ட 8,373 ஏக்கர் நிலம் - அனல்மின் திட்டத்தை செயல்படுத்திட சாத்தியமில்லை என்ற முடிவு எட்டிய பிறகு 25 ஆண்டுகளாகக் காத்திருக்கும் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிலமதிப்புத் தொகையைத் திரும்பப்பெறாமல் நிலம் திரும்ப ஒப்படைக்கப்படுகிறது. இவை எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஒருநாள் பயணத்தின் விளைவாக அரியலூர் மாவட்டம் பெற்றுள்ள முக்கியமான பயன்களாகும்.

### ‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ திட்ட 2ஆம் கட்டத் தொடக்க விழா!

குழந்தைகள் பிறந்தது முதல் 6 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்ளை வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கும் திட்டத்தை 21.5.2022 அன்று நீலகிரி மாவட்டத்தில் முத்தோரை குழந்தைகள் மையத்தில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். அத்திட்டத்தில் பயன்பெற்ற 77.3 விழுக்காடு குழந்தைகள் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பி திட்டம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்